சுருக்கம்

பணியமைப்பு – தமிழ் வளர்ச்சித் துறை – சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் –I முடித்தமை – தட்டச்சர் / இளநிலை உதவியாளர்களுக்கான முன் ஊதிய உயர்வு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ 2.1) துறை

அரசாணை (ப) எண்.87

நாள் 17.08.2021
பிலவ, ஆவணி–1
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.37, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 10.03.2020.
2. அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 15.10.2020.
3. அரசுக் கடித எண்.7358/ அவிIV/2005–13, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (அவிIV)த் துறை, நாள் 21.01.2008.

படிக்க:–

4. இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களின் கடிதம் ந.க.எண்.10487/நி2/2019, நாள் 03.12.2020.

-------

ஆணை:

மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்–I–இல் தேர்ச்சி பெற்ற தட்டச்சர் / இளநிலை உதவியாளர்களுக்கான முன் ஊதிய உயர்வு வழங்குதல் குறித்து தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களின் கடிதத்தில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 4(3)–இல் சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்–I–இல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன் ஊதிய உயர்வு வழங்குவது தொடர்பில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஒப்புதல் பெற்று 31.03.2021–க்குள் ஒப்பளிப்பு செய்யப் பெறலாம் என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி 10.03.2020–ஆம் நாளுக்கு முன் சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்–I–இல் தேர்ச்சி பெற்று முன் ஊதிய உயர்வு வழங்கப்படாத தட்டச்சர் / இளநிலை உதவியாளர்களின் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு முன் ஊதிய உயர்வு ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கிடும் பொருட்டு பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் இசைவு பெற்று வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் :–

| வ. எண் | பெயர் / பதவி | சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம் I தேர்வு எழுதிய நாள் |
|---|---|---|
| 1. | திரு. ஆ. லியாகத் அலி, உதவியாளர், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம். | 13.06.2019 |
| 2. | திரு. கா. ஆனந்தபாபு, இளநிலை உதவியாளர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8. | 13.06.2019 |
| 3. | திரு. வீ. வடிவேலு, தட்டச்சர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8. | 13.06.2019 |
| 4. | திருமதி ஹ. இஸ்மத்பர்ஜான், தட்டச்சர், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம். | 13.06.2019 |
| 5. | திருமதி மோ. விஜயலட்சுமி, தட்டச்சர், மண்டல தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி. | 13.06.2019 |
| 6. | திருமதி சி. தமிழ்ச்செல்வி, தட்டச்சர், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் | 13.06.2019 |
| 7. | திருமதி த. புஷ்பலதா, தட்டச்சர், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம். | 13.06.2019 |
| 8. | திருமதி இரா. சுகுணா, தட்டச்சர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை. | 28.12.2018 |

3. மேற்காணும் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததில், அடிப்படை விதி 31 A–இன் கீழுள்ள விதித்துளி (3) மற்றும் (4)–இல் உள்ள நிபந்தனைகள் நிறைவடைவதால், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள தெளிவுரைகளை இந்நேர்வில் உள்ள தட்டச்சர்கள் பொருட்டு பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மேலே பத்தி 2–இல் உள்ள 8 (எட்டு) தட்டச்சர் / இளநிலை உதவியாளர்களுக்கு சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்–I முடித்தமைக்கான முன் ஊதிய உயர்வு வழங்க இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. பார்வை இரண்டில் காணும் அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (அவிIV)த் துறை, நாள் 15.10.2020–ல் குறிப்பிட்ட காலக்கெடுவிலிருந்து விலக்களித்து மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.22592/அவிIV/2021, நாள் 04.08.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட தனியர்கள்,
(இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம் – வழியாக)
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இயக்குநர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம்,
நாகப்பட்டினம் / விழுப்புரம் / காஞ்சிபுரம் மாவட்டம்.
மண்டலத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8/மதுரை.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
கருவூலக் கணக்கு அலுவலர் (நாகப்பட்டினம் / விழுப்புரம் /
காஞ்சிபுரம் / திருநெல்வேலி)

நகல்:
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
நிதி(த.வ (ம) செ)த் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/8/21
பிரிவு அலுவலர்.
17/8/21